# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:161** **தேதி:-08.04.2017**

## ஒரு மணி நேர கூடுதல் பணியின் பலன்கள் மற்றும் சில செய்திகள்

**அன்பார்ந்த தோழர்களே,**

மார்ச் மாதத்தில் BSNL நிறுவனம் 29,52,251 புதிய மொபைல் இணைப்புகளை கொடுத்துள்ளது. ரிலையன்ஸ் ஜியோவின் கடுமையான போட்டிக்கு இடையே நம்மால் இந்த சாதனையை செய்ய முடிந்துள்ளது. குஜராத் மாநிலம் 2,82,982 இணைப்புகளைக் கொடுத்து முதல் இடத்தையும், உ.பி.கிழக்கு மாநிலம் 2,54,542 இணைப்புகளை கொடுத்து இரண்டாம் இடத்தையும் பிடித்துள்ளது. நமது தமிழகம் 2,36,211 இணைப்புகளைக் கொடுத்து மூன்றாம் இடத்தை பிடித்துள்ளது. நமது இலக்கை முழுமையாக அடையமுடியவில்லை என்றாலும், நாம் சாதித்துள்ளோம். இந்த சாதனைக்கு நமது அகில இந்திய சங்கங்கள் விடுத்த அறைகூவலான ஒருமணி நேர கூடுதல் பணி என்கிற இயக்கம் தான் முக்கிய காரணம். தலைமையின் அறைகூவலை சிரமேற்கொண்டு சாதித்த சாதனையாளர்களுக்கு தமிழ் மாநில சங்கத்தின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**அகில இந்திய BSNL உழைக்கும் மகளிர் கருத்தரங்கம்:-** 14.05.2017 அன்று போபாலில் நடைபெற இருந்த அகிலை இந்திய BSNL உழைக்கும் மகளிர் கருத்தரங்கம் ரயில் பயண முன்பதிவு சிரமமாக இருந்த காரணத்தால் தள்ளி வைக்கப்பட்டு இருந்தது. 07.04.2017 அன்று நடைபெற்ற அகில இந்திய சங்கத்தின் மையக் கூட்டத்தில் இந்த கருத்தரங்கத்தை 08.07.2017 அன்று ஹைதராபாத்தில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. பங்கேற்பாளர்கள் விவரங்களை சேகரித்து மாவட்ட செயலாளர்கள், நமது மாநில உதவி செயலாளரும், தமிழ் மாநில BSNL உழைக்கும் மகளிர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளருமான தோழர் P.இந்திரா அவர்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ராஜ்பாஷா அதிகாரி இலாகா தேர்வு:-** ராஜ்பாஷா அதிகாரிகளுக்கான இலாகா தேர்வை நடத்த வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து வற்புறுத்தி வந்தது. இந்த தேர்வை நடத்துவதற்கான பணிகளை கார்ப்பரேட் அலுவலகம் துவங்கி உள்ளது. தற்போது 31.03.2017 வரை உள்ள காலிப்பணியிடங்கள் தொடர்பான விவரங்களை மாநில நிர்வாகங்கள் வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

**டெலிகாம் டெக்னீசியன் இலாகா தேர்விற்கான கட்டணத்தை விலக்கிக் கொள்ள வேண்டும்:-** 0நமது மத்திய சங்கத்தின் தொடர் முயற்சிகளின் காரணமாக டெலிகாம் டெக்னீசியன்களுக்கான இலாகா தேர்வு 09.07.2017 அன்று நடத்தப்பட வேண்டும் என அனைத்து மாநிலங்களுக்கும் கார்ப்பரேட் அலுவலகம் உத்தரவு வெளியிட்டுள்ளது. நமது கோரிக்கையினை ஏற்று, இந்த தேர்வில் முன்மொழியப்பட்டிருந்த கம்ப்யூட்டர் மூலமாக நடைபெற இருந்த ONLINE தேர்விற்கு பதிலாக கையால் எழுதக்கூடிய தேர்வு நடத்தப்படும்.

அந்த தேர்விற்கு OC/OBC ஊழியர்களுக்கு 750/- ரூபாயும் SC/ST ஊழியர்களுக்கு 500/- ரூபாயும் என கார்ப்பரேட் அலுவலகம் கட்டணம் விதித்துள்ளது. இந்த தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் GM(Rectt) திருமிகு அனிமா ராய் அவர்களிடம் வற்புறுத்தி உள்ளது. நமது கோரிக்கையை பரிசீலிக்க அவர் இசைந்துள்ளார்.

**GM(FP) உடன் சந்திப்பு:-** BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் மற்றும் துணைப்பொது செயலாளர் ஆகியோர் 06.04.2017 அன்று திரு சுனில் குமார் GM(FP) அவர்களை சந்தித்து கீழ்கண்ட விஷயங்களை விவாதித்தனர்.

1) **JAO LICE தேர்வு எழுத ஊதிய விகிதம் என்கிற கட்டுப்பாட்டை நீக்குக:-** JAO இலாகா தேர்வு விதிகளில் 9020-17430 ஊதிய விகிதத்தில் கண்டிப்பாக 5 ஆண்டு கால சேவை செய்திருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது. இதனை ஏற்கனவே ஆட்சேபித்துள்ள நமது மத்திய சங்கம் எந்த ஊதிய விகிதத்தில் 5 ஆண்டுகால சேவை செய்திருந்தாலும் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும் என கேட்டிருந்தது. இந்த கோரிக்கையை பரிசீலிப்பதாக GM(FP) உறுதி அளித்துள்ளார்.
2) **இலாகா தேர்விர்கான அளவு குறைக்கப்படக் கூடாது**:- JAO தேர்வு விதிகளுக்கான முன்மொழிவில் இலாகா தேர்விற்கான பதவிகளின் அளவை 50%லிருந்து 25%ஆக குறைக்கப்பட்டிருந்தது. இதனை நமது மத்திய சங்கம் எதிர்த்து இந்த அளவு 50%ஆகவே தொடர வேண்டும் என வலியுறுத்தி உள்ளது. போதிய அளவிலான ஊழியர்கள் இந்த தேர்விற்கு விண்ணப்பிக்காத காரணத்தால் இந்த குறைப்பு முன்மொழியப்பட்டுள்ளதாக GM(FP) தெரிவித்தார். ஆனால் இவ்வாறு குறைக்கப்படக் கூடாது என நமது மத்திய சங்கம் வற்புறுத்தி உள்ளது.
3) **17.07.2016 அன்று நடைபெற்ற தேர்விற்கு கூடுதல் பதவிகள்**:- 17.07.2016 அன்று நடைபெற்ற JAO தேர்வு முடிவுகளை மறு பரிசீலனை செய்த காரணத்தால் முன்னர் அறிவிக்கப்பட்டு பயிற்சிக்கும் சென்ற தோழர்களுக்கு கூடுதலாக 300க்கும் மேற்பட்ட தோழர்கள் தகுதி பெற்றுள்ளனர். அறிவிக்கப்பட்ட காலிப்பணியிடங்களுக்கு கூடுதலாக தமிழகம் உள்ளிட்ட சில மாநிலங்களில் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. எனவே, அனைத்து தகுதி பெற்ற தோழர்களுக்கும் பதவி உயர்வு கிடைக்கும் வகையில் கூடுதல் பதவிகளை அனுமதிக்க வேண்டும் என நமது சங்கம் கார்ப்பரேட் அலுவலகத்திற்கு ஏற்கனவே கடிதம் எழுதியுள்ளது. இந்த கோரிக்கையை கவனிப்பதாக GM(FP) உறுதி அளித்துள்ளார்.

**அதிகப்படியாக வழங்கிய ஊதியத்திற்கான பிடித்தத்தை நிறுத்துக:-** ஊழியர்களுக்கு அதிகப்படியாக வழங்கப்பட்ட ஊதியத்தை பிடித்தம் செய்யக்கூடாது என்பதற்காக தலமட்டங்களுக்கு கார்ப்பரேட் அலுவலகம் வழிகாட்டுதல்களை கொடுத்துள்ளது. இந்த வழிகாட்டுதலின் படி அதன் தகுதிக்கேற்ப ஒவ்வொரு தனிப்பட்ட பிரச்சனையையும் கார்ப்பரேட் அலுவலகம் முடிவு செய்யும். கார்ப்பரேட் அலுவலகம் இறுதி முடிவு எடுக்கும் வரை அதிகப்படியாக வழங்கப்பட்ட ஊதியத்தை பிடித்தம் செய்வதை நிறுத்தி வைக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் முறையிட்டுள்ளது. இது தொடர்பாக கார்ப்பரேட் அலுவலகம் இதுவரை முடிவு எடுக்கவில்லை. இந்த பிரச்சனை தொடர்பாக மனித வள இயக்குனருடன் நமது பொதுச் செயலாளரும், துணை பொது செயலாளரும் 05.04.2017 அன்று விவாதித்தனர். பிடித்தம் செய்வதை நிறுத்துவது தொடர்பான முடிவை கார்ப்பரேட் அலுவலகம் விரைவில் முடிவு செய்யும் என்று பதில் அளித்தார்.

**01.10.2000க்கு பின் பணி நியமனம் செய்யப்பட்ட TSMகளுக்கு 4 வருடத்தில் முதல் பதவி உயர்வு:-** 01.10.2000க்கு பின் பணி நியமனம் செய்யப்பட்ட TSMகளுக்கு 4 வருடத்தில் முதல் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும் என பஞ்சாப் மற்றும் இமாச்சல பிரதேச உயர் நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்பை உச்ச நீதிமன்றம் சரி என உத்தரவிட்ட பின் அது போன்ற அனைத்து தோழர்களுக்கும் அமலாக்க வேண்டும் என மனிதவள இயக்குனரிடம் 05.04.2017 அன்று நடைபெற்ற கூட்டத்தில் BSNL ஊழியர் சங்கம் வற்புறுத்தி உள்ளது. இந்த பிரச்சனையில் பரிவுடன் கூடிய முடிவை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார்.

**பஞ்சாப் நேஷனல் வங்கியுடன் MOU:-** BSNL ஊழியர்களுக்கு பல் வேறு கடன்கள் வழங்குவதற்காக பஞ்சாப் நேஷனல் வங்கியுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

**விடுபட்ட DR JE தேர்வாளர்களை பரிசீலிக்க வேண்டும்:-** நேரடி நியமன JEக்களுக்கான தேர்வு பட்டியலில் முதல் பட்டியலில் பெயர் இடம்பெற்று, இரண்டாம் பட்டியலில் விடுபட்டு போனவர்களுக்கும் பணி வழங்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ச்சியாக முயற்சி செய்து வருகிறது. அத்தகைய சுமார் 70 தோழர்களுக்கும் பணி வழங்க வேண்டும் என்பதே நமது கோரிக்கை. இந்த பிரச்சனையை மனித வள இயக்குனரிடம் 05.04.2017 அன்று நமது பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் துணைப்பொது செயலாளர் ஆகியோர் வலியுறுத்தினர். தற்போது நடைபெற்று வரும் சான்றிதழ் பரிசோதனைக்கு பின் இந்த பிரச்சனை பரிசீலிக்கப்படும் என அவர் பதிலளித்துள்ளார்.

**35ஆவது தேசிய கவுன்சில் கூட்டம்:-** 17.03.2017 அன்று நடைபெறுவதாக இருந்த35ஆவது தேசியக் கவுன்சில் கூட்டம் மனித வள இயக்குனரின் உடல் நலக் குறைவால் ஒத்தி வைக்கப்பட்டது. விரைவில் அந்தக் கூட்டத்தை கூட்ட வேண்டும் என மனித வள இயக்குனரிடம் நமது பொதுச் செயலாளரும், துணைப்பொது செயலாளரும் வேண்டு கோள் விடுத்தனர். அந்தக் கூட்டம் விரைவில் கூடும் என மனித வள இய்க்குனர் உறுதி அளித்துள்ளார்.

**ஊழல் அதிகாரி CBIயில் பிடிபட்டார்:-** ஒரிசா மாநிலத்தில் MICROWAVE PROJECTல் ADDITIONAL GMஆக இருந்த G.C.பிடிகா, தொடர்ச்சியாக பல ஆண்டுகள் அதே பதவியில் நீடிப்பதாலும், பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுவதாகவும் குற்றம் கூறி அவரை மாற்ற வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து கார்ப்பரேட் அலுவலகத்தில் வலியுறுத்தி வந்தது. ஆனால் கார்ப்பரேட் அலுவலகம் அதனை கண்டுக் கொள்ளவில்லை. தற்போது ஒரு ஒப்பந்தக்காரருக்கு ஒரு பில்லை அனுமதிக்க ஒரு லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கும் போது CBIஆல் கையும் களவுமாக பிடிபட்டார்.

**ரிலையன்ஸ் ஜியோவின் புதிய திட்டத்திற்கு TRAI தடை:-** ரிலையன்ஸ் ஜியோவின் புதிய திட்டமான 'SUMMER SURPRISE PLAN'ஐ விலக்கிக் கொள்ள வேண்டும் என TRAI அறிவுறுத்தி உள்ளது. அந்த வழிகாட்டுதலை ஏற்றுக் கொள்வதாக ரிலையன்ஸ் ஜியோ அறிவித்துள்ளது. இதற்கு இடையில் ரிலையன்ஸ் ஜியோவால் துவக்கி வைக்கப்பட்டுள்ள கட்டண யுத்தத்தின் காரணமாக அரசாங்கத்திற்கு வரவேண்டிய லைசென்ஸ் கட்டணத்தில் 30% குறைந்துள்ளதாக DOT, மத்திய அமைச்சர் திரு மனோஜ் சின்ஹா அவர்களுக்கு எழுதியுள்ள 12 பக்க கடிதத்தில் தெரிவித்துள்ளது.

**இந்திய ரயில்வேயை தனியார்மயப்படுத்தும் மிகமுக்கிய முடிவு:-** இந்திய ரயில்வேயை தனியார்மயமாக்கும் முயற்சியின் முக்கியப்படியாக ரயில்வேக்கான ஒழுங்குமுறை ஆணையம் அமைப்பதற்கான ஒப்புதலை மத்திய அமைச்சரவை 05.04.2017 அன்று வழங்கியுள்ளது. ஒன்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இருந்தால் மட்டுமே ஒழுங்குமுறை ஆணையம் இருக்கும். எனவே, மத்திய அமைச்சரவையின் இந்த முடிவு ரயில் போக்குவரத்தில் தனியார்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்பதற்கான தெளிவான அறிகுறி. ரயில்வேயில் தனியார் அனுமதிக்கப்பட்டதென்றால் கடுமையான் ரயில் கட்டண உயர்வு இருக்கும். மெல்ல மெல்ல, தனியார் நிறுவனங்களுக்கு ஊக்கம் கொடுத்து தற்போதுள்ள இந்திய ரயில்வே துறையை நாசமாக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும்.

**வாழ்த்துக்களுடன்**,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**